பகுதி – 01 வினாக்கள்

கட்டுப்பாட்டுக் கணக்குகள்

(01) கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு தொடர்பாகப் பின்வரும் கூற்றுக்களில் சரியானது எது?

(1) இது கடன்கொடுத்தோரின் சுருக்கிய தகவல்களை வழங்குகின்றது

(2) இது கொடுக்கல் வாங்கல்களைப் பதிதலில் இரட்டைப் பதிவு முறைமை பின்பற்றப்படுகின்றது

(3) இது கடன்பட்டோரின் துணைப்பேரேட்டில் காணப்படும்

(4) இது பரீட்சை மீதியில் காணப்படும்

(5) இது குறித்த திகதியில் உள்ள கடன்பட்டோர் மீதியினை வழங்குகின்றது. (……..)

(02) கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுப்பாட்டுக் கணக்கு தொடர்பாக பின்வரும் கூற்றுக்களில் சரியானது எது?

(1) கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கொன்றின் வரவு மீதியொன்று இருக்க முடியாது

(2) கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மொத்த மீதியானது அதன் பேரேட்டு மீதியுடன் எப்போதும் சமப்படும்

(3) கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் கடன்பட்டோர் எதிரீடு சாத்தியமில்லை

(4) கொள்வனவு திரும்பல் நாளேட்டின் மொத்தத் தொகையானது கட்டுப்பாட்டுக் கணக்கில் பதியப்படும்

(5) சகல கடன்கொடுத்தோர் தொடர்பிலும் கட்டுப்பாட்டுக் கணக்கொன்று பேணப்பட வேண்டும்

(………)

(03) பின்வரும் கடன் விற்பனைகள் தொடர்பான தகவல்கள் 2020 மார்ச் மாதத்திற்குரியதாகும்.

கடன்பட்டோர்	பட்டியல் விலை (ரூபா 000)	வியாபாரக் கழிவு	காசு செலுத்த வேண்டிய திகதி	காசு செலுத்திய திகதி
மலிங்க	1,000	10 %	மார்ச் - 15	மார்ச் - 12
தரங்க	4,000	05 %	மார்ச் - 20	மார்ச் - 25

உரிய திகதிக்கு முன்னர் பணம் செலுத்தப்படுமாயின் 5% காசுக் கழிவு வழங்கப்படும் கடன்பட்டோருக்கு வழங்கிய கழிவை பதிவு செய்வதற்குரிய சரியான இரட்டைப் பதிவு எது?

(1) கொடுத்த கழிவுக் கணக்கு வரவு ரூபா 45,000 கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு செலவு ரூபா 45,000

(2) கொடுத்த கழிவுக் கணக்கு வரவு ரூபா 45,000 காசுக் கணக்கு செலவு ரூபா 45,000

(3) கொடுத்த கழிவுக் கணக்கு வரவு ரூபா 50,000 கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு செலவு ரூபா 50,000

(4) கொடுத்த கழிவுக் கணக்கு வரவு ரூபா 235,000 கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு செலவு ரூபா 235,000

(5) கொடுத்த கழிவுக் கணக்கு வரவு ரூபா 235,000 காசுக் கணக்கு செலவு ரூபா 235,000

(………)

(04) விற்பனை நாளேடு தொடர்பான பிழையான தகவல்களை உள்ளடக்கிய தொகுதி

A – விற்பனை விபரங்கள் யாவும் எழுதப்படும்

B – மீள் விற்பனைக்காக வாங்கப்பட்ட பொருட்களின் விற்பனைகள் பதியப்படும்

C – மீள் விற்பனைக்ககாக வாங்கப்பட்ட பொருட்களின் கடன் விற்பனைகள் பதியப்படும்

D – நாளேட்டில் உள்ள விற்பனை செய்யப்பட்ட பெயருக்குரிய தொகைகள் அவர்களது தனிப்பட்ட வர் கணக்கில் செலவில் எழுதப்படும்.

(1) A,B,D மாத்திரம் **(2)** A,B,C மாத்திரம் **(3)** A,C,D மாத்திரம்

(4) B,C,D மாத்திரம் **(5)** C மாத்திரம் **(………)**

(05) கொள்வனவு நாளேடு பற்றிய சரியான கூற்றுக்களைக் கொண்ட தொகுதி

A – கடனுக்கு கொள்வனவு செய்த சகல விபரங்களும் பதியப்படும்

B – கடனுக்கு கொள்வனவு செய்த ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள் பதியப்படும்

C – மீள் விற்பதற்கான சரக்குகளின் கடன் கொள்வனவுகள் பதியப்படும்

D – வியாபாரக் கழிவு தொடர்பான விபரங்கள் எழுதப்படும்

E – நாளேட்டின் கூட்டுத் தொகை பொதுப் பேரேட்டிற்கு மாற்றப்படும்

(1) A,B,C மாத்திரம் **(2)** B,C,D மாத்திரம் **(3)** C,D மாத்திரம்

(4) B,C,E மாத்திரம் **(5)** C,D,E மாத்திரம் **(………)**

(06) கட்டுப்பாட்டுக் கணக்கு என்பது தொடர்பில் சரியான கூற்று / கூற்றுக்களை தெரிவு செய்க

A – மொத்தமாக பதிவு செய்யும் கணக்கு

B – நிறுவனத்தின் செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்கான கணக்கு

C – ஒரே விதமான கொடுக்கல் வாங்கல்கள் பல அமைகின்ற போது அவற்றை மொத்தமாக பதிந்து வைப்பதற்கான கணக்கு

(1) A மாத்திரம் **(2)** B மாத்திரம் **(3)** Cமோத்திரம் **(4)** A,C மாத்திரம் **(5)** B,C மாத்திரம்

(………)

(07) இரட்டைப் பதிவை பூர்த்தி செய்வதற்கான மறு வடிவத்தினை எவ்வாறு அழைப்பார்?

(1) முதன்மை ஏடுகள் **(2)** மூல ஆவணங்கள் **(3)** நாளேடுகள்

(4) பேரேட்டுக் கணக்குகள் **(5)** பேரேடுகள் **(………)**

(08) பொதுப் பேரேடு என்பது ?

(1) சகல கணக்ககுகளையும் உள்ளடக்கிய பேரேடு

(2) எல்லாக் கொடுக்கல் வாங்கல்களையும் பொதுவாக பதிவதற்கான பேரேடு

(3) கடன்பட்டோர், கடன்கொடுத்தோர் நபர்களை தவிர்ந்த ஏனைய கணக்குகளை உள்ளடக்கிய பேரேடு

(4) துணைப் பேரேட்டிற்கான இன்னுமொரு பெயர்

(5) இங்குள்ள கணக்குகள் ஞாபன கணக்குகளாக காணப்படும் (……..)

(09) கட்டுப்பாட்டுக் கணக்குகளை தயாரிப்பதற்கான தகவல்கள் எம் மூலத்திலிருந்து பெற்றுக் கொள்ளப்படுகின்றது.

(1) மூல ஆவணத்திலிருந்து (2) மூல ஏட்டிலிருந்து (3) பேரேட்டிலிருந்து

(4) நாட்குறிப்பேடுகளிலிருந்து (5) பரீட்சை மீதியிலிருந்து (……..)

(10) கொள்வனவு நாளேட்டின் கூட்டுத் தொகை எதற்கு மாற்றப்படுகின்றது?

(1) கொள்வனவுக் கணக்குக்கு (2) கடன்கொடுத்தோர் கணக்குக்கு

(3) பொதுக் பேரேட்டுக் கணக்குக்கு (4) துணைப் பேரேட்டுக் கணக்குக்கு

(5) வருமானக் கூற்றுக்கு (……..)

(11) பொதுப்பேரேட்டில் மட்டும் கட்டுப்பாட்டுக் கணக்கையும் கடன்பட்டோர், கடன்கொடுத்தோர்களுக்காக துணைப்பேடுகளையும் பராமரிக்கையில், இக்கணக்குகள் பின்வரும் எவ் அடிப்படையில் தயார் செய்யப்படுகின்றன?

(1) இரண்டு வகை பேரேட்டிலும் இரட்டைப் பதிவு முறையைப் பின்பற்றல்.

(2) இரண்டு வகை பேரேட்டிலும் ஒற்றைப் பதிவு முறையைப் பின்பற்றல்.

(3) துணைப் பேரேடுகளில் மட்டும் இரட்டைப் பதிவு முறையைப் பின்பற்றல்.

(4) பொதுப்பேரேட்டில் இரட்டைப் பதிவு முறையையும், துணைப் பேரேட்டில் ஒற்றைப் பதிவு முறையையும் பின்பற்றல்.

(5) துணைப்பேரேட்டில் இரட்டைப் பதிவு முறையையும் பொதுப் பேரேட்டில் ஒற்றைப் பதிவு முறையையும் பின்பற்றல். (………)

(12) கடன்பட்டோர் கணக்கில் செலவு மீதி தோன்றுவதற்கான காரணமாக அமையாதது?

(1) கணக்கைத் தீர்த்த பின் உட்திரும்பல் இடம் பெறுதல்

(2) விற்பனை செய்வதற்கு முன் முற்பணம் பெறுதல்

(3) காசோலை மறுக்கப்பட்ட போது கழிவ மறுக்கப்பட்டமை

(4) வியாபாரக் கழிவு கழிக்காத உட்திரும்பல் பதியப்படல்

(5) கணக்கை தீர்த்த பின் கழிவு வழங்கப்படுதல் (………)

(13) பின்வரும் கூற்றுக்களில் கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு தொடர்பில் எது சரியானது?

(1) கட்டுப்பாட்டுக் கணக்கானது ஒவ்வொரு கடன்கொடுத்தோருக்கும் பராமரிக்கப்படும்

(2) எல்லாக் கொள்வனவுகளும் கடன் கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் பதியப்படும்

(3) கொள்வனவு நாளேட்டின் மொத்தத் தொகையானது கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் பதியப்படும்

(4) கடன்கொடுத்தோரிடமிருந்து பெற்ற கழிவானது கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் பதியப்படுவதில்லை.

(5) கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கானது கடன்கொடுத்தோர் பேரேட்டில் பராமரிக்கப்படும்

(………)

(14) சுதன் நிறுவனத்தின் கடன்பட்டோர் தொடர்பான சில தகவல்கள்.

01.04.2019 இல் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி ரூபா 30,000

இக்காலப் பகுதியில் மொத்த விற்பனைகள் ரூபா 600,000 (இதில் கடன் விற்பனை 80%)

கடன்பட்டோரிடம் பெற்ற காசு ரூபா 200,000

வழங்கிய கழிவு ரூபா 10,000

31.03.2020 இல் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி யாது?

(1) ரூபா 420,000 **(2)** ரூபா 300,000 **(3)** ரூபா 390,000 **(4)** ரூபா 240,000 **(5)** ரூபா 440,000

(………)

பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி 15 ஆம், 16 ஆம் வினாக்களுக்கு விடையளிக்குக.

Nasu நிறுவனத்தின் கடன்பட்டோர் தொடர்பாக 31.03.2020 இல் முடிவடைந்த ஆண்டிற்காக கிடைத்த சில தகவல்கள்.

01.04.2019 இல் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு வரவு மீதி ரூ 275,000, செலவு மீதி ரூ 25,000

கடன்விற்பனைகள் ரூபா 400,000

விற்பனைத் திருப்பம் ரூபா 150,000

பெற்ற காசு ரூபா 120,000 (மீளப் பெற்ற அறவிடமுடியாக் கடன் ரூபா 10,000 உட்பட)

அறவிடமுடியாக் கடன் ரூபா 15,000

வழங்கிய கழிவுகள் ரூபா 8,000

31.03.2020 இல் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு செலவு மீதி ரூபா 18,000

(15) 31.03.2020 இல் உள்ளபடியான நிதிநிலமைக் கூற்றில் காட்டப்படும் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி யாது?

(1) ரூபா 385,000 **(2)** ரூபா 367,000 **(3)** ரூபா 349,000 **(4)** ரூபா 357,000 **(5)** ரூபா 339,000

(………)

(16) 31.03.2020 இல் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு கொண்டு செல் மீதியில் ஏற்பட்ட அதிகரிப்பு அல்லது குறைவைக் கணிக்குக.

(1) ரூபா 117,000 **(2)** ரூபா 110,000 **(3)** ரூபா 101,000 **(4)** ரூபா 107,000 **(5)** ரூபா 111,000

(………)

(17) கட்டுப்பாட்டுக் கணக்கை தயாரிப்பதனால் கிடைக்கும் நன்மை அல்லாதது?

(1) மிக விரைவாக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம்

(2) ஒரே விதமான கொடுக்கல் வாங்கல்களை ஒரே பார்வையில் பார்வையிடலாம்

(3) உள்ளக கணக்காய்வு கட்டுப்பாடாக அமையும்

(4) மிகவிரைவாக பரீட்சை மீதி தயாரிக்க உதவும்

(5) பிழைகள் ஏற்பட்டுள்ள பேரேடுகளை கண்டறிந்து கொள்வது சிரமாக அமையும்

(………)

(18) சுசிலா நிறுவனத்தின் கடன்கொடுத்தோர் தொடர்பாக கிடைத்த சில தகவல்கள்.

01.04.2019 இல் கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு கட்டுப்பாட்டுக் கணக்கு மீதிகள்

வரவு ரூபா 25,000, செலவு ரூபா 120,000

கடன்கொடுத்தோருக்கு செலுத்திய பணம் ரூபா 350,000

வெளித்திரும்பலின் பட்டியல் பெறுமதி ரூபா 40,000

கொள்வனவின் போது 10% வியாபாரக் கழிவு கடன்கொடுத்தோரிடமிருந்து பெறப்பட்டது.

31.03.2020 இல் கடன்கொடுத்தோர் நிலுவை எவையும் காணப்படவில்லை எனக் கருதி கொள்வனவு பட்டியலில் உள்ள கடன் கொள்வனவின் பெறுமதி யாது?

(1) ரூபா 310,000 **(2)** ரூபா 360,000 **(3)** ரூபா 340,000 **(4)** ரூபா 306,000 **(5)** ரூபா 295,000

(………)

19, 20 ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதற்கு பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.

கடன்கொடுத்தோரிடம் கொள்வனவு செய்த பொருட்களின் குறித்த விலை ரூபா 50,000 குறித்த விலையில் 20% வியாபாரக் கழிவு கடன்கொடுத்தோரிடமிருந்து கிடைக்கப் பெற்றுள்ளது. பின்னர் கடன்கொடுத்தோரிடம் கடனை விரைவாக தீர்ப்பனவு செய்தமையினால் அவரிடம் இருந்து 10% காசுக் கழிவு பெறப்பட்டது.

(19) கொள்னவவு நாளேட்டிலும் காசுப் பெறுபனவு நாளேட்டின் கழிவு நிரலிலும் பதியப்படும் தொகை யாது?

	கொள்வனவு நாளேட்டில் (ரூபா 000)	**கழிவு நிரலில் (ரூபா 000)**
(1)	50,000	45,000
(2)	40,000	36,000
(3)	40,000	4,000
(4)	50,000	5,000
(5)	50,000	4,500

(………)

(20) மேலே தரப்பட்ட விடயங்களில் காசுப்பாய்ச்சல் அற்ற விடயங்களின் பெறுமதி ?

(1) ரூபா 5,000 **(2)** ரூபா 14,000 **(3)** ரூபா 10,000 **(4)** ரூபா 4,000 **(5)** ரூபா 9,000

(………)

(21) பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் நிமலன் வியாபாரத்தில் இடம் பெற்றுள்ளன.

- ❖ 01.03.2020 - உபேந்திரனிடமிருந்து கடனுக்கு ரூ 150,000 கிரயமான சரக்குகள் கொள்வனவு.
- ❖ 05.03.2020 - உபேந்திரனுக்கு ரூ 30,000 கிரயமுடைய சரக்குகள் திருப்பி அனுப்புதல்.
- ❖ 20.03.2020 - ரூ 100,000 கிரயமுடைய சரக்குகள் ரூ 160,000 இற்கு கடனுக்கு விற்பனை
- ❖ 20.03.2020 - ரூ 10,000 ஆன விற்பனைத் தரகுக் கொடுப்பனவு
- ❖ 02.04.2020 - உபேந்திரனுக்குச் செலுத்த வேண்டிய முழுத்தொகையை கொடுத்து தீர்த்தல்.

மேற்படி கொடுக்கல் வாங்கல்கள் காரணமாக 31.03.2020 இல் உள்ளவாறான நிமலின் வியாபாரத்தின் கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மற்றும் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு ஆகியவற்றின் மீதிகளில் ஏற்படும் அதிகரிப்பு

	கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு (ரூ)	**கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு (ரூ)**
(1)	20,000	150,000
(2)	20,000	160,000
(3)	120,000	150,000
(4)	120,000	160,000
(5)	150,000	160,000

(……...)

(22) **2020 மார்ச் 31 இல் வியாபார வருமதியாளர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி ரூ 130,000 இத்தினத்திலான கடன்பட்டோர் பட்டியல் மொத்தத்துடன் இனங்கவில்லை. பின்னரான கணக்காய்வின் போது பின்வரும் தவறுகள் கண்டு பிடிக்கப்பட்டன.**

- விற்பனை நாளேடு ரூபா 25,000 மிகையாக கூட்டப்பட்டியிருந்தது.
- அனுமதித்த கழிவு ரூபா 6,000 கழிவு நிரலில் இடம் பெறவில்லை.
- வாடிக்கையௗார் ஒருவரினால் திருப்பியனுப்பியனுப்பட்ட ரூபா 4,000 பெறுமதியான பண்டங்கள் துணைப் பேரேட்டில் மாத்திரம் பதியப்பட்டியிருந்தது.

31.03.2020 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்றில் காட்டப்பட வேண்டிய கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி யாது?

(1) ரூபா 12,000 **(2)** ரூபா 95,000 **(3)** ரூபா 145,000 **(4)** ரூபா 130,000 **(5)** ரூபா 121,000

(…….)

(23) விமலுக்கு விற்பனை ரூபா 50,000 விற்பனை நாளேட்டில் ரூபா 5,000 எனப் புதியப்பட்டியிரு ந்தது எனின்

(1) பொதுப் பேரேட்டை மாத்திரம் பாதிக்கும்
(2) துணைப் பேரேட்டை மாத்திரம் பாதிக்கும்
(3) பொதுப் பேரேட்டையும் துணைப்பேரேட்டையும் பாதிக்கும்
(4) பொதுப் பேரேட்டையும் கடன்பட்டோர் பேரேட்டையும் பாதிக்கும்
(5) பொதுப் பேரேட்டையும் கடன்கொடுத்தோர் பேரேட்டையும் பாதிக்கும் (……..)

பின்வரும் 24, 25 ஆம் வினாக்களுக்கு விடையளிப்பதற்கு கீழ் வரும் தகவல்களைப் பயன்படுத்துக.

2020.03.31 இல் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி ரூபா 500,000

2020.03.31 இல் மொத்தக் கடன்பட்டோர் பேரேட்டு மீதி ரூபா400,000

A - விற்பனை நாளேட்டின் மொத்தக் கூட்டுத்தொகை ரூபா570,000 ஆனது கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் ரூபா750,000 ஆக பதியப்பட்டுள்ளது.

B - பதிவழிக்கப்பட்ட அறவிடமுடியாக் கடன் ரூபா20,000 உம், கடன்பட்டோருக்கு அனுமதிக்கப்பட்ட கழிவு 60,000வும் கடன்பட்டோர் கட்பாட்டுக் கணக்கில் மாத்திரமே பதியப்பட்டுள்ளது.

C - அறவிடமுயடிாக் கடன் என பதிவழிக்கப்பட்ட கடன்பட்டோர் ஒருவரிடமிருந்து பெற்ற காசு ரூபா 40,000 காசுக் கணக்கில் வரவிலும் அறவிடமுடியாக் கடன் கணக்கில் செலவிலும் பதியப்பட்டது.

(24) கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கின் 2020.03.31 இல் உள்படியான சரியான மீதி?

(1) ரூ 400,000 **(2)** ரூ 320,000 **(3)** ரூ 240,000 **(4)** ரூ 280,000 **(5)** ரூ 360,000 **(………)**

(25) கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கை இணக்கம் செய்யும் போது மேலே தரப்பட்டுள்ள A,B,C ஆகிய தகவல்களில் எத்தகவல் கடன்பட்டோர் துணைப்பேரேடுகளில் சீராக்கத்தை வேண்டி நிற்கின்றது?

(1) A,Bமாத்திரம் (2) A,Cமாத்திரம் (3) Bமாத்திரம் (4) A,Bமாத்திரம் (5)A,B,Cஆகிய எல்லாம்

(………)

(26) வரையறுத்த அம்மு பொதுக் கம்பனியின் 31.03.2020 இல் உள்ளபடி கடன்பட்டோர் கட்டுப்பாட்டு கணக்கு மீதி ரூபா 460,000 ஆகவும் கடன்பட்டோர் பேரேட்டின் படியான கடன்பட்டோர் மீதிகளின் மொத்தம் ரூபா 450,000 ஆகவும் காணப்பட்டன. அதனை தொடர்ந்து மேற்கொண்ட ஆய்வின் போது பின்வருவன வெளிக்கொணரப்பட்டன.

- அறவிடமுடியாக் கடனாக பதிவழிக்கப்பட்ட ரூபா 10,000 கடன்பட்டோர் மீதியொன்று கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கிற்கு மாற்றப்படவில்லை.
- விற்பனைப் பட்டியலொன்றின் ரூபா 21,000 விற்பனை நாளேட்டில் ரூபா 12,000 எனப் பதியப்பட்டியிருந்தது.
- கடன்பட்டவரொருவர் நேரடியாக வங்கிக்குச் செலுத்திய ரூபா 31,000 கடன்பட்டோர் பேரேடு மற்றும் கட்டுப்பாட்டுக் கணக்கு ஆகிய இரண்டும் பதியப்பட்டியிக்கவில்லை.

31.03.2020 இல் உள்ளவாறான கடன்பட்டோர் கட்டுப்பாட்டு கணக்கின் சரியான மீதி?

(1) ரூ410,000 **(2)** ரூ428,000 **(3)** ரூ448,000 **(4)** ரூ459,000 **(5)** ரூ490,000 **(………)**

(27) 31.03.2020 இலுள்ளவாறான தனுஜா PLC இன் கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதியானது ரூபா 360,000 ஆகும். அதே நாளில் கடன்கொடுத்தோர் பேரேட்டின் படி கடன்கொடுத்தோர் மீதியானது மொத்தம் ரூபா 406,000 ஆகும். தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட பரிசீலணையானது பின்வருவனவற்றைக் வெளிக்கொணர்ந்தது.

- தீர்க்கப்படாமல் இருந்த மீதியொன்றுக்கு விநியோகஸ்தர் ஒருவரால் விதிக்கப்பட்ட ரூபா10,000 வட்டியானது கடன்கொடுத்தோர் பேரேட்டில் மட்டும் பதியப்பட்டியிருந்தது.

- கொள்வனவு நாளேட்டின் மொத்தம் ரூபா62,000 ஆனது கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் ரூபா26,000 ஆக பதியப்பட்டிருந்தது.
- கடன்கொடுத்தோர் ஒருவருக்கு செலுத்திய ரூபா28,000 ஆனது கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கிலும் கடன்கொடுத்தோர் பேரேட்டிலும் பதியப்பட்டிருக்கவில்லை.

31.03.2020 இலுள்ளவாறான கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கின் சரியான மீதி?

(1) ரூ358,000 (2) ரூ368,000 (3) ரூ 378,000 (4) ரூ 404,000 (5) ரூ406,000 (………)

(28) 2020.03.31 இல் சிறிதேவி வியாபாரத்தின் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி ரூபா 13,600 ஆக காணப்பட்ட நிலையில் கடன்பட்டோர் பேரேடுகளின் தனிநபர்களின் கூட்டுத் தொகை ரூபா 14,100 ஆக காணப்பட்டது. இவ்வேறுபாடு பிழையொன்றின் காரணமாக எழுந்ததாகும். பின்வருவனவற்றுள் எவ்விடயம் இப்பிழையை சிறப்பாக வெளிப்படுத்துகின்றது.

(1) அனுமதிக்கப்பட்ட கழிவு ரூபா500, கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் சரியாக பதிவிடப்பட்டும், கடன்பட்டோர் பேரேட்டில் பதியப்படாமலும் காணப்பட்டது.
(2) அனுமதிக்கப்பட்ட கழிவு ரூபா500, கடன்பட்டோர் பேரேட்டில் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் பதியப்படாமலும் காணப்பட்டது.
(3) கடன்பட்டோர் மீதி ரூபா1000 கடன்பட்டோர் பட்டியலில் இரு முறை பதியப்பட்டுள்ளது.
(4) கடன்பட்டோர் கணக்கொன்றின் செலவு மீதித் தொகை ரூபா500 கடன்பட்டோர் பட்டியலில் ஒரு வரவு மீதியாக உள்ளடக்கப்பட்டுள்ளது.
(5) ரூபா1,000 தொகையான கடன்கொடுத்தோர் பேரேடுகளின் மீதியொன்று கடன்பட்டோர் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளது. (………)

29, 30 ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதற்காகக் கீழே தரப்பட்டுள்ள தகவல்களைப் பயன்படுத்துக.

நிறுவனமொன்றின் பொதுப்பேரேட்டில் காணப்படும் 31.03.2020 இல் உள்ளவாறான கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதியானது ரூபா 500,000 ஆக இருந்தது. எனினும் இம்மீதியானது அத்தினத்தில் உள்ள கடன்பட்டோர் பேரேட்டிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட கடன்பட்டோர் மீதிகளின் மொத்ததுடன். இனங்கவில்லை. தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி பின்வருவன வெளிக்கொண்டுவரப்பட்டுள்ளன.

(i) 2020 மார்ச் மாதத்தில் கடன்பட்டோரிமிடருந்து பெறப்பட்ட ரூபா 180,000 காசோலைகளானது காசுப் பெறுபனவு நாளேட்டிலும் கடன்பட்டோர் பேரேட்டிலுள்ள அது தொடர்பான கணக்குகளிலும் மாத்திரம் பதியப்பட்டுள்ளது. எனினும் இது பொதுப்பேரேட்டிற்கு மாற்றப்பட்டிருக்கவில்லை.

(ii) ரூபா 520,000 கடன் விற்பனையானது ரூபா 250,000 ஆக விற்பனை நாளேட்டில் பதியப்பட்டுள்ளது. எனினும், இது கடன்பட்டோர் பேரேட்டில் சரியாக பதியப்பட்டுள்ளது.

(iii) புதிவழிக்கப்பட்ட ரூபா 50,000 அறவிடமுடியாக் கடனானது பொதுப்பேரேட்டில் சரியாகப் பதியப்பட்டுள்ளது. எனினும் இது கடன்பட்டோர் பேரேட்டில் காணப்படும் அது தொடர்பான கடன்பட்டோர் கணக்கில் பதியப்படவில்லை.

(iv) கடன்பட்டோர் பேரேட்டிலிருந்து மீதிகளை பிரித்தெடுக்கும் போது ரூபா 80,000 மீதியொன்று விடுபட்டுள்ளது.

(29) மேற்கூறப்பட்ட வழுக்களைச் சரிசெய்வதற்கு முன்னர் கடன்பட்டோர் பேரேட்டிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட கடன்பட்டோர் மீதிகளின் மொத்தம் :

(1) ரூ 440,000 (2) ரூ 470,000 (3) ரூ 560,000 (4) ரூ 590,000 (5) ரூ 620,000 (…….)

(30) 31.03.2019 இல் உளள்வாறான கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கின் சரியான மீதி :

(1) ரூ 440,000 (2) ரூ 470,000 (3) ரூ 560,000 (4) ரூ 590,000 (5) ரூ 620,000 (…….)

(31) கடன்பட்டோா் பேரேடுகளின் மீதிகளின் பட்டியலுடன் கடன்பட்டோர் பேரேட்டு கட்டுப்பாட்டுக் கணக்கை இணக்கிய போது பின்வரும் பிழைகள் கண்டு பிடிக்கப்பட்டன.

- விற்பனை நாளேடு ரூபா50,000 இனால் உயர்வாகக் காட்டப்பட்டுள்ளது.
- கடன்பட்டோர் ஒருவரின் தனிப்பட்ட கணக்கு ரூபா4.000 இனால் குறைவாக காட்டப்பட்டுள்ளது.

இப்பிழைகளை திருத்துவதற்கு கீழே காட்டப்பட்டுள்ள சீராக்கங்களில் எதனை மேற்கொள்ளுதல் வேண்டும்?

	கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு	கடன்பட்டோர் மீதிகளின் பட்டியல்
(1)	ரூ 50,000 ஐ செலவு வைத்தல்	ரூ 4.000 இனால் குறைவடைதல்
(2)	ரூ 50,000 ஐ வரவு வைத்தல்	ரூ 4,000 இனால் அதிகரித்தல்
(3)	ரூ 50,000 ஐ செலவு வைத்தல்	ரூ 4,000 இனால் அதிகரித்தல்
(4)	ரூ 50,000 ஐ வரவு வைத்தல்	ரூ 4,000 இனால் குறைவடைதல்
(5)	ரூ 50,000 ஐ செலவு வைத்தல்	மாற்றமில்லை.

(………)

(32) பின்வரும் வழுக்கள் சுந்தர் நிறுவனத்தின் கணக்குப் புத்தகங்களிலிருந்து கிடைத்த சில தகவல்கள்

A – விற்பனை நாளேட்டின் கூட்டுத் தொகை ரூபா 15,000 ஆல் மிகையாக கூட்டப்பட்டது

B – மதன் திருப்பியனுப்பிய பண்டங்கள் ரூபா 3,000 மதன் கணக்கில் பதியப்படவில்லை

C – சுபாவிற்கு வழங்கிய கழிவு ரூபா 2,000 கழிவு நிரலில் பதியப்படவில்லை

D – உரிமையாளர் பற்றிய பண்டம் ரூபா 8,000 கணக்குப் புத்தகங்களிலிருந்து முற்றாக விடுபட்டுள்ளது

மேலே தரப்பட்ட தவறுகளில்

	பொதுப் பேரேட்டில் தாக்கத்தை ஏற்படுத்துவது	துணைப்பேரேட்டில் தாக்கத்தை ஏற்படுத்துவது
(1)	A,C	B,C
(2)	A,C,D	B,C
(3)	A,C	B
(4)	A,C,D	B
(5)	A,C,D	A,B

(………)

(33) ராஜ் நிறுவனத்தின் 31.03.2020 இல் காணப்பட்ட கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி ரூபா 120,000 ஆகக் காணப்பட்டது ஆனால் விற்பனைப் பேரேட்டு மீதி ரூபா 100,000 ஆக இருந்தது. இவ்விரு மீதிகளும் வேறுபடுவதற்கான காரணிகளாக அமையக் கூடியது

(1) விற்பனை நாளேட்டின் கூட்டுத் தொகை ரூபா 20,000 ஆல் குறைவாக கூட்டப்பட்டுள்ளது

(2) குமாருக்கு விற்பனை ரூபா 10,000 குமார் கணக்கில் இரு தடவை பதியப்பட்டுள்ளது

(3) சிவாவுக்கு வழங்கிய கழிவு ரூபா 10,000 துணைப் பேரேட்டில் உள்ள கணக்கில் தவறான பக்கத்தில் பதியப்பட்டுள்ளது

(4) விமல் உட்திருப்பிய பண்டம் ரூபா 10,000 அவரின் கணக்கில் இரு முறை பதியப்பட்டது

(5) சேகரின் பதிவளித்த அறவிடமுடியாக் கடன் ரூபா 20,000 துணைப் பேரேட்டில் மட்டும் பதியப்பட்டுள்ளது. (………)

34,35 ஆம் வினாக்களுக்கு விடையளிப்பதற்கு கீழே தரப்பட்டுள்ள தகவல்களைப் பயன்படுத்துக **ரூபா (000)**

கடன் பெயர்	கடன் விற்பனை	விற்பனை திருப்பம்	பெற்ற காசு	வழங்கிய கழிவு	அ.மு.க
அச்சு	2,000	500	800	80	-
விச்சு	1,500	300	600	70	-
கிச்சு	750	250	400	20	?

கிச்சுவின் கடன் பெறமுடியாமையினால் முறிவடைந்தவராக மார்ச் மாத நடுப்பகுதியில் இனங் காணப்பட்டுள்ளார்.

(34) 2020 மார்ச் 31 இல் வியாபார வருமதியாளர் கட்டுப்பாட்டுக் கணக்கில் தோன்றும் மீதி யாது?

(1) ரூபா 1 020 000 **(2)** ரூபா 1 230 000 **(3)** ரூபா 1 150 000

(4) ரூபா 1 200 000 **(5)** ரூபா 1 070 000 (……)

(35) காசு அடிப்படையிலும் அட்டுறு அடிப்படையிலும் விற்பனை வருமானமாக எவ்வளவு இனங் காணப்படும்.

	காசு அடிப்படையில் (ரூ 000)	அட்டுறு அடிப்படையில் (ரூ 000)
(1)	1800	2950
(2)	1800	4250
(3)	1800	3120
(4)	1800	1150
(5)	1800	3200

(…….)

(36) விற்பனை பேரேட்டுக் கட:டுப்பாட்டுக் கணக்கில் ஐயக் கடன் ஒதுக்கம் எழுதப்படுவது?

(1) வரவாக **(2)** செலவாக **(3)** வரவாகவும் செலவாகவும்

(4) மீதி கீழ் கொண்டு செல்லப்படல் **(5)** கணக்குகளில் காட்டப்படுவதில்லை

(…….)

பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி 37,38 ஆம் வினாக்களுக்கு விடை தருக

நிறுவனமொன்றில் 31.03.2020 இல் தயாரித்த கடன்பட்டோர் இணைக்கக் கூற்று பின்வருமாறு.

(ரூபா 000)

கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி		1,500
(+) கொள்வனவு நாளேட்டின் கூட்டுத் தொகை குறைவாக காட்டியது	100	
சுஜியிடம் பெற்ற கழிவு அவரின் கணக்கில் பதியப்படவில்லை	10	110
		1,610
(-) கட்டுப்பாட்டுக் கணக்கில் மிகையாகக் கூட்டியது ……..	150	
மதன் கணக்கில் பதியப்படாத கொள்வனவு …………..	30	(180)
கடன்கொடுத்தோர் பேரேட்டு மீதி ……………………………		**1,430**

(37) 31.03.2020 இல் உள்ளவாறான நிதிநிலமைக் கூற்றில் காட்டப்படும் சரியான வியாபார சென்மதியாளர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி யாது?

(1) ரூ 1 500 000 **(2)** ரூ 1 450 000 **(3)** ரூ 1 430 000 **(4)** ரூ 1 570 000 **(5)** ரூ 1 550 000

(………)

(38) மேலே தரப்பட்ட தரவுகளை திருத்திய பின் தேறியலாபத்தில் ஏற்பட்ட தேறியமாற்றமும் 31.03.2020 சரியான துணைப் பேரேட்டு மீதியும்
ஏற்பட்ட தேறிய மாற்றம் என்ன?

	தேறியலாபம் (ரூபா 000)	**துணைப்பேரேட்டு மீதி (ரூபா 000)**
(1)	100,000 குறைவு	1 450 000
(2)	100,000 அதிகரிப்பு	1 450 000
(3)	120,000 குறைவு	1 410 000
(4)	120,000 குறைவு	1 450 000
(5)	120,000 அதிகரிப்பு	1 450 000

(………)

(39) அமல் கம்பனிக்கு செலுத்தப்பட்ட ரூபா 10,000 காசோலை காசுப் பெறுபனவு நாளேட்டிலும் சென்மதியாளர் கட்டுப்பாட்டுக் கணக்கிலும் சென்மதியாளர் துணைப் பேரேட்டிலும் ரூபா 1,000 எனப் பதியப்பட்டுள்ளது எனின் சரியான கூற்றை தெரிவு செய்க.

(1) பரீட்சை மீதி சமப்படும் திருத்திய காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கில் இனங்காணப்படும்
(2) பரீட்சை மீதி சமப்படும் திருத்திய காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கு, திருத்திய சென்மதியாளர் கட்டுப்பாட்டுக் கணக்கில் இனங் காணப்படும்
(3) பரீட்சை மீதி சமப்படும் திருத்திய காசு, சென்மதியாளர் கட்டுப்பாட்டுக் கணக்கில் இனங் காணப்படுதுடன் சென்மதியாளர் இணைக்கக் கூற்றிலும் இனங்காணப்படும்
(4) பரீட்சை மீதி சமப்படும் திருத்திய காசு, சென்மதியாளர் கட்டுப்பாட்டுக் கணக்கில் இனங் காணப்படும்
(5) திருத்திய காசு, சென்மதியாளர் கட்டுப்பாட்டுக் கணக்கில் இனங்காணப்படும் (………)

40, 41 ஆம் வினாக்களுக்கு விடையளிக்க பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.

31.03.2020 இல் தயாரித்த கடன்பட்டோர் பட்டியல் மீதிகளின் மொத்தம் ரூபா 42,500 ஆக இருந்தது. எனினும் பொதுப் பேரேட்டில் காணப்பட்ட கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு வேறு மீதியைக் காட்டியது.

- மோகனுக்கு விற்பனை ரூபா 4,000 கட்டுப்பாட்டுக் கணக்கில் ரூபா 14,000 ஆக இருந்ததது
- நிமால் கணக்கின் செலவு மீதியான ரூபா 1,500 கட்டுப்பாட்டுக் கணக்கில் செலவில் இடம் பெறவில்லை
- மீளப்பெற்ற அறவிடமுடியாக் கடன் ரூபா 1,200 கட்டுப்பாட்டுக் கணக்கில் செலவில் மட்டும் பதியப்பட்டுள்ளது
- விற்பனைத் திருப்பம் ரூபா 2,000 விற்பனைத் திரும்பல் நாளேட்டில் ரூபா 2,200 எனப் பதியப்பட்டதுடன் உரிய நபர் கணக்கில் ரூபா 200 எனப் பதியப்பட்டுள்ளது
- காசு விற்பனை மூலம் பெற்ற தொகை ரூபா 4,500 காசுப் பெறுபனவு நாளேட்டில் உள்ள கடன் பட்டோரின் பகுப்பாய்வு நிரலில் இடப்பட்டுள்ளது.

(40) 31.03.2020 இல் திருத்திய வருமதியாளர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி யாது?

(1) ரூபா 39,500 **(2)** ரூபா 40,500 **(3)** ரூபா 40,000 **(4)** ரூபா 30,700 **(5)** ரூபா 40,700

(……….)

(41) 31.03.2020 இல் திருத்த முன்னரான வருமதியாளர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி யாது?

(1) ரூபா 46,300 **(2)** ரூபா 46,500 **(3)** ரூபா 45,200 **(4)** ரூபா 45,000 **(5)** ரூபா 40,700

(……….)

(42) நாசீம் நிறுவனத்தின் சென்மதியாளர் பட்டியல் மீதிகளின் கூட்டுத் தொகையானது ரூபா 438,900 ஆக காணப்பட்டது இத்தொகை சென்மதியாளர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதியுடன் இணங்கவில்லை. கீழ் வரும் தவறுகள் இனங் காணப்பட்டன.

- எதிரீடான ரூபா 980 சென்மதியாளர் கட்டுப்பாட்டுக் கணக்கில் மாத்திரம் பதியப்பட்டுள்ளது
- வெளித்திரும்பல் நாளேட்டின் கூட்டுத் தொகை ரூபா 1,000 குறைத்துக் கூட்டப்பட்டுள்ளது
- சென்மதியாளருக்கு அனுப்பிய பட்டியலான ரூபா 4,344 சென்மதியாளர் கணக்கில் 4,434 என பதிவு செய்யப்பட்டது

நாசீம் நிறுவனத்தின் நிதிநிலமைக் கூற்றில் சென்மதியாளராக காட்டப்பட வேண்டிய தொகை யாது?

(1) ரூபா 436,830 **(2)** ரூபா 438,010 **(3)** ரூபா 439,790 **(4)** ரூபா 737,830 **(5)** ரூபா 438,900

(……….)

(43) ஒரு வணிகத்தின் கடன்பட்டோர் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு. (ரூபா 000)

01.04.2019 இல் மீதி	128
31.03.2020 இல் மதீ	48
கால எல்லைக்குள் கடன்பட்டோரிடமிருந்து பெற்றது	415
கால எல்லைக்குள் கொடுத்த கழிவு	10
கால எல்லைக்குள் அறவிடமுடியாக் கடனாக பதிவழித்தது	15

உடன் காசு விற்பனை போல 4 மடங்கு கடன் விற்பனை நடைபெற்றது. 2019/2020 ஆம் வருடத்தில் மொத்த விற்னை வருமானம் யாது?

(1) ரூபா 360,000 **(2)** ரூபா 340,000 **(3)** ரூபா 450,000 **(4)** ரூபா 400,000 **(5)** ரூபா 345,000

(……….)

பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி 44,45,46 ஆகிய வினாக்களுக்கு விடையளிக்குக

வரையறுத்த சுமதி கம்பனியின் 31.03.2020 இல் கடன்பட்டோர் தொடர்பான விபரங்கள்

31.03.2020 இல் கடன்பட்டோர் பட்டோலை மீதிகளின் மொத்தம் ரூபா 21,600

31.03.2020 இல் விற்பனைப் பேரேட்டுக் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா 27,750

31.03.2020 இல் வரைபு வருமானக் கூற்றின் படி வழுக்களுடனான தேறியலாபம் ரூபா 100,000

இவ்விரு மீதிகளின் வேறுறபாட்டிற்கான காரணங்கள் பின்வருமாறு.

- ரூபா 7,300 விற்பனைப் பட்டியல் ஒன்று முற்றாக தவறவிடப்பட்டுள்ளது
- சுங்கரிடம் பெற்ற காசு ரூபா 4,800 விற்பனைப் பேரேட்டில் எதுவித பதிவுகளும் இடம் பெறவில்லை
- ரூபா 1,350 அறவிடமுடியாக் கடனுக்குப் பொதுப் பேரேட்டில் பதிவுகள் இடம் பெறவில்லை.

(44) 31.03.2020 இல் சீராக்கிய கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதியைக் கணிக்குக

(1) ரூபா 33,700 **(2)** ரூபா 21,800 **(3)** ரூபா 36,400 **(4)** ரூபா 19,100 **(5)** ரூபா 26,400

(……….)

(45) 31.03.2020 இல் திருத்திய கடன்பட்டோர் பேரேட்டு மீதி யாது?

(1) ரூபா 19,100 **(2)** ரூபா 33,700 **(3)** ரூபா 39,500 **(4)** ரூபா 22,750 **(5)** ரூபா 24,100

(……….)

(46) 31.03.2020 இல் திருத்திய தேறியலாபம் யாது?

(1) ரூபா 107,300 **(2)** ரூபா 98,650 **(3)** ரூபா 105,950 **(4)** ரூபா 94,050 **(5)** ரூபா 110,750

(……….)

(47) சக்தி நிறுவனத்தின் 31.03.2020 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கடன்பட்டோர் தொடர்பான தகவல்கள் வருமாறு.

கடன்பட்டோர் மீதிகள் 01.04.2019 இல்	**(ரூபா)**
ராஜேஸ்	7,000
விமல்	4,500
கமல்	(2,000)

விற்பனை நாளேட்டின் ரூபா 45,000, கமலிற்கு ரூபா 1,500 காசு கொடுக்கப்பட்டது. கடன்பட்டோரிடம் காசுப் பெறுபனவின் மொத்தம் ரூபா 22,000 இந்நிதியாண்டில் வேறு கொடுக்கல் வாங்கல்கள் எவையும் இடம் பெறவில்லை. **31.03.2020 இல் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி எவ்வாறு அமைந்தியிருக்கும்?**

(1) வரவு மீதி ரூபா 32,500

(2) வரவு மீதி ரூபா 34,500 , செலவு மீதி ரூபா 500

(3) வரவு மீதி ரூபா 35,000 , செலவு மீதி ரூபா 500

(4) வரவு மீதி ரூபா 32,500 , செலவு மீதி ரூபா 2,000

(5) வரவு மீதி ரூபா 36,500 , செலவு மீதி ரூபா 2,000 **(……….)**

(48) நிறுவனங்களின் விற்பனைப் பேரேட்டுக் கட்டுப்பாட்டுக் கணக்கு 31.03.2020 இல் ரூபா 38,000 வாக மீதியைக் காட்டியது. ஆனால் துணைப் பேரேட்டில் உள்ள கடன்பட்டோர் பட்டோலை மீதியுடன் இணங்கவில்லை. கணக்காய்வின் போது பின்வரும் தவறுகள் இனங் காணப்பட்டுள்ளன.

- விற்பனை நாட்குறிப்பேடு ரூபா 2,000 அதிகமாக கூட்டப்பட்டியிருந்தது.
- வாடிக்கையாளர் வசந்தியிடமிருந்து பெற்று வங்கியில் வைப்புச் செய்த காசோலை மறுக்கப்பட்டுள்ளது இது வங்கிக் கூற்றில் மாத்திரம் காணப்பட்டுள்ளது
- கடன்படுனர் சுதாவின் ரூபா 500 தொகையானது கடன்கொடுத்தோர் பேரேட்டில் உள்ள அவரின் மீதிக்கு எதிரீடாக மேற்கொள்ளப்பட்டத தொடர்பான பதிவுகள் முழுமையாக விடுபபட்டுள்ளது

	திருத்திய கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி (ரூபா 000)	**திருத்த முன் பட்டோலை மீதி (ரூபா 000)**
(1)	38,500	38,500
(2)	40,500	35,500
(3)	38,500	36,000
(4)	41,000	38,000
(5)	37,500	36,500

(……….)

(49) வியாபார சென்மதியாளர் படடியல் மீதிகளுடன் வியாபார சென்மதியாளர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதியை இணக்கிய போது பின்வரும் வழுக்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

- கடன்கொள்வனவு ரூபா 5,400 கொள்வனவு நாளேட்டில் ரூபா 4,500 எனப் பதியப்பட்டது
- கொள்வனவு திருப்பம் ரூபா 1,500 நபர் கணக்கில் தவறான பக்கத்தில் பதியப்பட்டியிருந்தது.

இவ்வழுவை திருத்துவதற்கு செய்ய வேண்டிய சீராக்கம்

	சென்மதியாளர் கட்டுப்பாட்டுக் கணக்கில்	**சென்மதியாளர் பட்டியல் மீதியில்**
(1)	ரூபா 900 செலவு வைத்தல்	ரூபா 2,100 வை அதிகரித்தல்
(2)	ரூபா 9000 செலவு வைத்தல்	ரூபா 2,100 வை குறைத்தல்
(3)	ரூபா 900 செலவு வைத்தல்	ரூபா 3,000 வை அதிகரித்தல்
(4)	ரூபா 900 செலவு வைத்தல்	ரூபா 3,000 வை குறைத்தல்
(5)	ரூபா 900 செலவு வைத்தல்	ரூபா 600 வை குறைத்தல்

(……..)

(50) 31.03.2020 இல் சென்மதியாளர் பேரேட்டு மீதிகளின் படடியல் மொத்தம் ரூபா 60,000 ஆக காட்டியது அத்திகதியில் சென்மதியாளர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி இதனுடன் இணங்கவில்லை வேறுபாட்டிற்கான காரணங்கள் பின்வருமாறு

- வெளித்திரும்பல் ரூபா 4,000 உரிய நபர் கணக்கில் ரூபா 400 எனப் பதியப்பட்டியிருந்தது
- சென்மதியாளருக்கு செலுத்திய காசு ரூபா 20,000 ஆல் மிகையாக கட்டுப்பாட்டுக் கணக்கில் பதியப்பட்டியிருந்தது
- கடன்கொடுத்தோர் கணக்கில் செலவு மீதி ரூபா 3,000 பட்டியலில் வரவு மீதியாக உள்ளடக்கப்பட்டுள்ளது

31.03.2020 இல் உள்ளவாறான நிதி நிலமைக் கூற்றிலும் 31.03.2020 இல் உள்ளவாறான பரீட்சை மீதியிலும் காட்டப்படும் சென்மதியாளர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி யாது?

	31.03.2020 இல் உள்ளவாறான நிதிநிலமைக்கூற்றில்	31.03.2020 இல் உள்ளவாறான பரீட்சை மீதியில்
(1)	ரூபா 62,400	ரூபா 42,400
(2)	ரூபா 42,400	ரூபா 62,400
(3)	ரூபா 66,000	ரூபா 42,400
(4)	ரூபா 46,400	ரூபா 42,400
(5)	ரூபா 56,400	ரூபா 42,400

(……..)

51 – 100 வினாக்களுக்கு சுருக்கமான விடை எழுதுக.

(51) வியாபார வருமதியாளர் கட்டுப்பாட்டுக் கணக்கில் செலவு மீதி தோன்றுவதற்கான காரணங்கள் 2 ஐயும் வியாபார சென்மதியாளர் கட்டுப்பாட்டுக் கணக்கில் வரவு மீதி தோன்றுவதற்கான காரணங்கள் ஐயும் குறிப்பிடுக.

(அ) வியாபார வருமதியாளர் கட்டுப்பாட்டுக் கணக்கில் செலவு மீதி தோன்றுவதற்கான காரணம்

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

